நகல்

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – பணி நியமனங்களில் ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு மற்றும் சரியான பங்கேற்பு – கண்காணிக்கவும் உறுதி செய்யும் துறைகளில் பற்றாளரைக் குறித்தறிதல் – ஆணைகள் வெளியிடப்பட்டன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (பமேச2) துறை

அரசாணை (நிலை) எண்.65 நாள் 9.4.97.

ஆணை:

ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு விதி நியமனங்களுக்கான சுழற்சிமுறை முதலியன கடைபிடிக்கப்படுவதையும், ஆதிதிராவிடர் பழங்குடியினர் பணிகளில் பங்கேற்பினையும் உறுதி செய்யும் பொருட்டும் துறைகளில் பற்றாளர் ஒருவரைக் குறித்தறிவது பற்றி அரசு ஆய்வு செய்து கீழே கூறியவாறு ஆணையிடுகிறது.

2. செயலகத்துறைகள், துறைத் தலைமை அலுவலகங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் அனைத்திலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் இட ஒதுக்கீடு விதிப்படி நியமனம் செய்தல், பங்கேற்பு ஆகியவற்றைக் கண்காணிக்கவும் உறுதி செய்யவும் ஒரு பற்றாளர் (Nodal Officer) இருப்பார்.

i. செயலகத்துறைகளில் பணியாளர் தொகுப்புப் பணிகளை ஆற்றும் துணைச்செயலர்/ இணைச்செயலர்/கூடுதல் செயலர் அல்லது சிறப்புச் செயலர் பற்றாளராக இருப்பார். இரண்டுக்கு மேற்பட்ட துறைகளை ஒரே செயலரின் கீழ் வருகையில் யாரேனும் ஒருவரை செயலர் தீர்மானிக்கலாம்.

ii. செயலகப்பணியாளர் தொகுப்பைப் பொறுத்த அளவில் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை பற்றாளர் துறையாக (Nodal Department) இருக்கும். அத்துறையிலுள்ள செயலகப்பணியாளர் தொகுப்புப் பணிகளை ஆற்றும் இணைச் செயலாளர் பற்றாளராக இருப்பார்.

iii. துறைத்தலைமை அலுவலகங்களில் இரண்டாம் நிலையிலுள்ள அதிகாரி ஒருவர் பற்றாளராக இருப்பார்.

iv. மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்களில் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் பற்றாளராக இருப்பார்.

3. i. பற்றாளர்கள் ஆதிதிராவிடர், பழங்குடியினர் நியமனம், பங்கேற்பு ஆகியவற்றில் தத்தம் துறைகளில் ஒரு குறை தீர்க்கும் பாசறை (Grievance Cell) ஆகவும் செயல்படுவர். தனியார் அல்லது பணியாளர் அமைப்புகளின் முறையீடுகள் இவர்களுக்கு அனுப்பப்படலாம்.

நகல்

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – பணி நியமனங்களில் ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு மற்றும் சரியான பங்கேற்பு – கண்காணிக்கவும் உறுதி செய்யும் துறைகளில் பற்றாளரைக் குறித்தறிதல் – ஆணைகள் வெளியிடப்பட்டன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (பமேச2) துறை

அரசாணை (நிலை) எண்.65 நாள் 9.4.97.

ஆணை:

ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு விதி நியமனங்களுக்கான சுழற்சிமுறை முதலியன கடைபிடிக்கப்படுவதையும், ஆதிதிராவிடர் பழங்குடியினர் பணிகளில் பங்கேற்பினையும் உறுதி செய்யும் பொருட்டும் துறைகளில் பற்றாளர் ஒருவரைக் குறித்தறிவது பற்றி அரசு ஆய்வு செய்து கீழே கூறியவாறு ஆணையிடுகிறது.

2. செயலகத்துறைகள், துறைத் தலைமை அலுவலகங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் அனைத்திலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் இட ஒதுக்கீடு விதிப்படி நியமனம் செய்தல், பங்கேற்பு ஆகியவற்றைக் கண்காணிக்கவும் உறுதி செய்யவும் ஒரு பற்றாளர் (Nodal Officer) இருப்பார்.

i. செயலகத்துறைகளில் பணியாளர் தொகுப்புப் பணிகளை ஆற்றும் துணைச்செயலர்/இணைச்செயலர்/கூடுதல் செயலர் அல்லது சிறப்புச் செயலர் பற்றாளராக இருப்பார். இரண்டுக்கு மேற்பட்ட துறைகளை ஒரே செயலரின் கீழ் வருகையில் யாரேனும் ஒருவரை செயலர் தீர்மானிக்கலாம்.

ii. செயலகப்பணியாளர் தொகுப்பைப் பொறுத்த அளவில் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை பற்றாளர் துறையாக (Nodal Department) இருக்கும். அத்துறையிலுள்ள செயலகப்பணியாளர் தொகுப்புப் பணிகளை ஆற்றும் இணைச் செயலாளர் பற்றாளராக இருப்பார்.

iii. துறைத்தலைமை அலுவலகங்களில் இரண்டாம் நிலையிலுள்ள அதிகாரி ஒருவர் பற்றாளராக இருப்பார்.

iv. மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்களில் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் பற்றாளராக இருப்பார்.

3. i. பற்றாளர்கள் ஆதிதிராவிடர், பழங்குடியினர் நியமனம், பங்கேற்பு ஆகியவற்றில் தத்தம் துறைகளில் ஒரு குறை தீர்க்கும் பாசறை (Grievance Cell) ஆகவும் செயல்படுவர். தனியார் அல்லது பணியாளர் அமைப்புகளின் முறையீடுகள் இவர்களுக்கு அனுப்பப்படலாம்.